தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 29, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 12, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.”

வெள்ளம்போல் துன்பம் வந்தாலும் அதனை வெல்லும் வழி யாது என்பதை அறிவுடையவர்கள் நினைத்த மாத்திரத்திலேயே அத்துன்பம் விலகி ஓடி விடும்.

1. அறிவிப்புகள்

(அ) ‘காகிதமில்லா சட்டமன்றம்’ என்னும் இலக்கினை எய்திட டிஜிட்டல் ஹவுஸ் (Digital House) திட்டம் செயல்படுத்தும் வகையில் மின்புத்தகம் (e-book) செயலி உருவாக்கப்பட்டுள்ளமை, வினாக்கள்-விடைகள் நேரத்தினை Live Streaming முறையில் தேசிய இ-விதான் போர்ட்டலில் (NeVA Portal) காணுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையை முழுமையாக காகிதமில்லா சட்டமன்றமாக்கிடும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக டிஜிட்டல் ஹவுஸ் (*Digital House*) திட்டத்தினை இன்று (12-4-2023) முதல் செயல்படுத்திடும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்களின் மேசைகளின்மேல் பொருத்தப்பட்டுள்ள தொடுதிரை சிறு கணினிகளில் மின்-புத்தகம் (*e-Book*) என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மின்-புத்தகத்தினைப்*

(பேரவைத் தலைவர்) [2023 ஏப்ரல் 12

பயன்படுத்துவதற்கான பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச் சொல் (Password) ஆகியவை அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் உருவாக்கப்பட்டு ஏற்கெனவே தொடுதிரை சிறு கணினிகளில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. இதனைப் பயன்படுத்தி, மாண்புமிகு உறுப்பினர்கள் மின்–புத்தகத்தில் உள்ளவற்றைக் காணலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பாராளுமன்ற அமைச்சகத்திலிருந்து வந்திருக்கும் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் இச்செயலக அலுவலர்கள்மூலம் கடந்த சில நாட்களாக பேரவை மண்டபத்தில், காலையில் பேரவை கூடுவதற்கு முன், மின்–புத்தக செயலி பயன்படுத்தும் விதம் குறித்து செயல் விளக்கம் அளித்து வரப்பெற்றது. மேலும், நேவா (NeVA) திட்டத்தின்கீழ், பேரவையில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில், House Controller Module மற்றும் Display Unit Module ஆகியவை இன்று முதல் செயல்பாட்டுக்கு வருகின்றன. முதற்கட்டமாக வினாக்கள்–விடைகள் நேரத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் பற்றிய விவரம் இந்த House Controller Module மற்றும் Display Unit Module ஆகியவைமூலம், உரையாற்றும் உறுப்பினர் பெயர், புகைப்படம், பேசும் பொருள், துறை, உரையாற்றும் நேரம் உள்ளிட்டவற்றை பேரவை மண்டபத்தில் பொருத்தப்பட்டுள்ள நான்கு பெரிய திரைகளில் காண முடியும்.

மேலும், தேசிய இ-விதான் போர்ட்டலில் (NeVA Portal) வினாக்கள்–விடைகள் நேரத்தின் நேரடி ஒளிபரப்பினை, Live Streaming என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் முன் உள்ள தொடுதிரைக் கணினியிலும் காணலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.